Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 16-12-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

# Sell Potato on Harvest

Potato (Solanum tuberosum L.) popularly known as 'The king of vegetables', has emerged as fourth most important food crop in India after rice, wheat and maize. Potato is a major food crop, grown in more than 150 countries globally. The top ten producers in the world are China, Russia, India, USA, Ukraine, Poland, Germany, Belarus, France and Netherlands. These together contribute about 70% of the total production.

India produced 447 lakhs tonnes of potato from an area of 19.65 lakh hectares in 2012-13. Uttar Pradesh, West Bengal, Bihar, Assam, Madhya Pradesh, Punjab and Gujarat accounted for 85 per cent share in total area and 89 percent of the total production in 2012-13 in India. India has exported about 11.14 lakh tonnes of potato in 2012-2013, which is 13 per cent more than that of 2011-12. The area and production of potato were 4860 hectares and 97,200 tonnes, respectively in Tamil Nadu during 2012-13 according to the statistics given by National Horticultural Research and Development Foundation (NHRDF). In Tamil Nadu, in 2012-13 the area and production decreased by 1 per cent and 7 per cent, respectively compared to 2011-12.

In Tamil Nadu, potato is grown in the hilly regions of Dindigul, Nilgiris and also in the plains of Krishnagiri and Erode districts. In Kadaibogam season, it is sown from September to October and harvested from December to January. There are two major varieties, viz., Kufri Jyoti and Kufri Giriraj grown in Nilgiri

district. Potato farmers in Tamil Nadu have raised queries whether the Kadaibogam potato sown in September-October, 2013 and presently harvested will fetch higher prices or not; and whether to sell immediately or store for better prices. To answer these queries, the NAIP – Domestic and Export Market Intelligence Cell (DEMIC) functioning in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analysed the past 15 years prices that prevailed at Nilgiris Cooperative Marketing Society (NCMS), Mettupalayam. As per the results of the analysis the prices of potato will hover around Rs. 20-24 per kg in December, 2013 and Jan 2014. If export order are received, then the prices may increase by Rs.5-7 per kg which is yet to be confirmed. Under the above conditions, farmers are recommended to sell immediately the potato being harvested now.

**For further details contact:-**


Domestic and Export Market Intelligence Cell (DEMIC),
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore – 641 003.
Phone - 0422-2431405


**For Technical Details please contact:-**


Dr. N. Selvaraj
Professor and Head,
Horticultural Research Station,
Vijayanagaram,
Udhagamandalam – 643001.
Phone: 0423-2442170
Mobile: 94430 52219


Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,                                                                                    தேதி: 16-12-2013
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை ஆகும் கடைபோக உருளைக்கிழங்கை உடனே விற்கவும்

உருளைக்கிழங்கு 'காய்கறிகளின்' அரசன் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் அது முக்கியமான உணவுப்பொருள்களில் ஒன்றாகும். உருளைக்கிழங்கு பரவலாக 150க்கும் மேற்பட்ட நாடுகளில் பயிரிடப்படுகிறது. சீனா, ரஷ்யா, இந்தியா, உக்ரைன், போலந்து, ஜெர்மனி, பெலாருஸ், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து ஆகியன உலகில் முதல் 10 இடங்களை வகிக்கின்றன. உலகின் மொத்த உற்பத்தியில் மேற்கண்ட நாடுகள் 70 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன.

இந்தியாவில் உருளைக்கிழங்கு 2012-13ல் 19.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 447 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவின் மொத்த உருளைக்கிழங்கின் பரப்பு மற்றும் உற்பத்தியில் உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார், அசாம், மத்திய பிரதேசம், பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் முறையே 85 சதவீதம் மற்றும் 89 சதவீதம் பங்களிக்கின்றன. இந்தியாவிலிருந்து 2012-13ல் 11.14 இலட்சம் டன்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகமாகும். தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2012-13ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 4,860 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 97,200 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த ஆண்டைக் (2011-2012) காட்டிலும் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 1 சதவீதம் மற்றும் 7 சதவீதம் இந்த ஆண்டு குறைந்து உள்ளது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப்பாங்கான இடங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. கடைபோக உருளைக்கிழங்கு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை விதைப்பு செய்து டிசம்பர் மற்றும்

ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் இரகங்கள் பயிரிடப்படுகின்றன. நீலகிரி மாவட்ட விவசாயிகள் தற்போது அறுவடை ஆகி வரும் கடைபோக உருளைக்கிழங்கின் விற்பனை முடிவுகளை எடுப்பதற்கு ஆர்வமாக உள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் (NCMS) கடந்த 15 வருடங்களாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது. அதன்படி கடைபோக உருளைக்கிழங்கு அறுவடையின் போது டிசம்பர் மற்றும் ஜனவரியில் கிலோவிற்கு ரூ.20 முதல் 24 வரை கிடைக்கும் என கணக்கிடப்படுள்ளது. ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரித்தால் மட்டுமே கிலோவிற்கு ரூ.5 முதல் 7 வரை உயர வாய்ப்புள்ளது. ஆதலின் அறுவடை ஆகும் உருளைக்கிழங்கினை உடனே விற்பனை செய்யுமாறு விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

முனைவர். என். செல்வராஜ்
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம்-643001.
தொலைபேசி - 0423-2442170
கைப்பேசி - 94430 52219

மக்கள் தொடர்பு அலுவலர்